பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 14 வெள்ளிக்கிழமை (28 - 01 - 2000) VALAMPURI ஒலி: 40

பொது சன நூலகம்
28 JAN 2000

● வவுனியா நகரில்—

# பிரதம தபாலகத்தில் குண்டுவெடிப்பு

# 9 பேர் பலி! 54 பேர் வரையில் காயம்!

## பருத்தித்துறையை சேர்ந்தவரும் பலி

(வலம்புரி வவுனியா விசேட நிருபரும், கொழும்பு நிருபரும்)

வவுனியா பிரதம தபால் கந்தோரில் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

12 பெண்கள் உட்பட 54 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பருத்தித்துறையைச் சேர்ந்த வவுனியா உதவித் தபால் அதிபர் சின்னையா பாஸ்கரலிங்கமும் ஒருவராவர்

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 24 பேரில் ஒருவர் இடைவழியில் மரணமடைந்ததாகவும், 10 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா பிரதம தபால் கந்தோரில் நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பின் போது ஒன்பது பேர்கொல்லப்பட்டும் 54 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா, அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## றிமோட் கொன்றோல் மூலம் வெடித்தது?

வவுனியா தபால் கந்தோர் குண்டு வெடிப்பின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தபால் பெட்டியின்கீழ் வைக்கப்பட்ட குண்டு றிமோட் கொன்றோல் மூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

பிரதம தபால் கந்தோரில் வவுனியா பொலீஸ் நிலையத்திற்கு மிகஅருகாமையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது,

(வ)

## ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்

நேற்று இடம் பெற்ற வவுனியா தபாற்கந்தோர் குண்டுவெடிப்புச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒன்பது பேர்களின் விபரம் வருமாறு;

வவுனியா தபால் கந்தோர் உதவித் தபால் அதிபர் சின்னையா பாஸ்கரலிங்கம் வயது 56 (பருத்தித்துறை), ரி. தவனேசன் (சாஸ்திரி கூழாங்குளம்), கொழும்பைச் சேர்ந்த திருமதி செல்வராசா சிவயோகம்மா ஆகியோரது

( 6ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் காயமடைந்த பொதுமக்களின் பெயர்விபரங்கள்

கிளிநொச்சி உதவிப் பணிப்பாளர் மகாலிங்கம், பத்மநாதன் வவுனியா கல்விப்பணிமனையைச் சேர்ந்த கலாச்சார உத்தியோகத்தர் செல்லத்துரை விந்தன், வவுனியா கல்விப் பணிமனை உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை விஜயகுமார், பாலகிருஷ்ணன், மோகன கிருஷ்ணன், கணபதிப்பிள்ளை புலேந்திரராஜ், பாரதிதாசன், திருநாவுக்கரசு, சுந்தர், ரஜீம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### பிரதம தபால் அதிபரும் காயம்

## எங்கும் அவலக்குரல் கேட்டதாகத் தபால் அதிபர் தகவல்

நேற்று நடைபெற்ற வவுனியா தபாற்கந்தோர் குண்டுவெடிப்பு சம்பவத்தின் போது தனது அன்றாட கடமையில் ஈடுபட்டிருந்த பிரதம தபாலதிபர் கணபதிப்பிள்ளையும் காயமடைந்துள்ளார்.

தபால் அதிபர் கணபதிப்பிள்ளை இக்குண்டுவெடிப்பு சம்பவம் பற்றி தெரிவிக்கையில் பாரிய குண்டுவெடிப்பு

(6ம் பக்கம் பார்க்க)

தபால் கந்தோரின் கவுண்டரில் உள்ள தபால் பெட்டிகளின் அடியில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளதாக அறியவந்துள்ளது.

இக்குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்டவர்களில் தபாற் கந்தோர் உதவித்தபாலதிபரான பருத்தித்துறையைச் சேர்ந்த பாஸ்கரலிங்கம் [வயது 53] ஒருவர் என அடையாளங் காணப்

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கடையடைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கு பயணத்தைத் மேற்கொள்வதற்கு புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள பாஸ் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு நகரங்களிலும் கடையடைப்பு நடைபெறுமென தெரியவருகிறது.

பாஸ் நடை முறையினால்

(6ம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்ட நீதிபதி சம்பவ இடத்தை சென்று பார்வையிட்டார்

(வவுனியா)

வவுனியா தபால் கந்தோர் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பிரேதப்பரிசோதனை செய்து மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் சடலங்களை கையளிப்பதற்கான நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா மாவட்ட நீதிபதி என். தியாகேந்திரன் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்திற்கு நேற்றுப் பகல் விஜயம் செய்து பார்வையிட்டார்.

### உரும்பிராய் மாணவி கைது குறித்து

## வசாவிளான் பாடசாலை மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் இயங்கி வரும் யா/வசாவிளான் மத்தியமகா வித்தியாலய க. பொ. த. (சாதாரணம்) மாணவியான செல்வி பிரியா ஸ்ரீஸ்கந்தராஜா கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து பாடசாலை ஆசிரியர் மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா மனித உரிமைகள்

## ஆணைக்குழு இணைப்பதிகாரி 11 தமிழர்களையும் பார்வையிட்டார்

(வவுனியா)

வவுனியாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வன்னி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட 11 தமிழர்களையும் வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் தனது அதிகாரிகள் சகிதம் நேற்று முன்தினம்

(6ம் பக்கம் பார்க்க)

### தாக்கியவர்களை கைது செய்யக்கோரி

## நல்லூர்ப் பிரதேச சபையைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கடமையில் ஈடுபட்டிருந்த பொது சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கும்பலொன்றினால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் தாக்கியவர்கள் மீது இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்

(6ம் பக்கம் பார்க்க)

### பொ. சு. ப. மீதான தாக்குதலின் எதிரொலி

## யாழ். பிராந்திய சுகாதார சேவை ஸ்தம்பிதம் அடையும் நிலையில்!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியில் வைத்து சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கியவர்களை இன்று வெள்ளிக்கிழமைக்குள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தாவிட்டால் தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக வடபிராந்திய சுகாதார சேவைகள் அமைப்பின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

பொது சுகாதாரப் பரிசோதகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து நேற்றையதினம் அவசரமாகக் கூடிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளைத் தாக்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடு

[6ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஒன்று கூடல் நிகழ்வு

(வட்டுக்கோட்டை)

வலிமேற்குப் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்று கூடல் 29 ஆம் திகதி சனிக்கிழமைமாலை 9.30 மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர்கா.சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்று கூடலுக்கு பிரதம விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ.மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிய வருகிறது.

(க-24)

## மணிக்கோபுரம் கட்டப்படுகிறது

(அச்சுவேலி)

அச்சுவேலி தித்தாங்குளம் பிள்ளையார் ஆலயத்திற்கு பொது மக்களின் உதவியுடன் புதிய மணிக்கோபுரம் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

(க-14)

தென்மராட்சியில்

# 1636 பேருக்கு வீடு புனரமைப்பு கடன்கள் வழங்கப்பட்டன

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 60 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 1636 பேருக்கு சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு வடக்கிற்கான புனரமைப்பு புனர்வாழ்வு அதிகார சபையினால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 1636 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபாவும், 705 பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 15 ஆயிரம் ரூபாவும் 383 பேருக்கு மூன்றாம் கட்டக் கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொத்தமாக சேதமடைந்த ஒரு வீட்டினைப் புனரமைப்பதற்கு அதிகார சபையினால் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(க-77)

யாழ். நிலைமை குறித்து

## மனிதஉரிமைஆணைக்குழுஅதிகாரியுடன் சுவிஸ் குழுவினர் கலந்தாராய்வு

(அச்சுவேலி)

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த சுவிஸ் அனைத்துலக அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான முகவர் நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகள் கடந்த 24ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி ஜீவேஸ்வரா வுடன் யாழ். குடாவின் தற்போதைய நிலைமை குறித்தும் மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்து உரையாடியுள்ளனர்.

யாழ்.மனித உரிமைஆணைக்குழுவின் பணிமனையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது கலந்து கொண்டிருந்த சுவிஸ் அதிகாரிகளான ஈவா மெல்கிறேன், ஆன் டேவிட் வைகிங் மற்றும் ஸ்ரினா கார்ல்டன் ஆகியோரிடம் யாழ்ப்பாணத்து போர்ச் சூழ் நிலைகள் மக்களின் வாழ்க்கைப்பிரச்சினைகள்இராணுவ கைது காரணமாக மக்கள் படும் இன்னல்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் அதிகாரிகள் பற்றாக்குறையால் செயற்பாடுகளில் ஏற்படும் தாமத நிலை போன்றவை பற்றியும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

(க-14)

டக்ளஸ் தேவானந்தாவின்

## பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் தேசிய இளைஞர் மன்றத்திற்கு உதவி

(அச்சுவேலி)

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாட்டுக்கு 50,000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் இருதட்டச்சு இயந்திரங்களும் வழங்கப்பட்டதாக உதவி இயக்குனர் சிவதட்சனாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ், சுழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைத்து கடந்த 21 ஆம் திகதி இப் பொருட்கள் தமிழ்மரபு வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள அவர் இவ் வைபவத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 152 இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்றும் இளைஞர் மன்றங்களின் செயற்பாடு குறித்து விரிவாக விளக்கிக் கூறியதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-14)

## இலங்கைத் தம்பதியர் சவுதியில் மூச்சுத்திணறி மரணமாகினர்

(கொழும்பு)

சவுதிஅரேபியாவில் பணிபுரிந்த இலங்கைத்தம்பதியர், வெப்பத்தை உற்பத்தி செய்யும் இயந்திரத்தினால் ஏற்பட்ட மிதமிஞ்சிய புகைகாரணமாக மூச்சுத்திணறி இறந்துள்ளதாக சம்பந்தப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட முகம்மத் பதித் (40) அவரது மனைவி நாகூர்உம்மா(30)ஆகியோரே இவ்வாறு இறந்தவர்களாவர்.

கடந்த புதனன்று கடுமையானகுளிர் இவர்கள் வசித்த ஜீபைல் பகுதியில் நிலவியதைத் தொடர்ந்து, வெப்பத்தை உற்பத்தி செய்யும் நிலக்கரி இயந்திரத்தை இயங்க வைத்துவிட்டு இவர்கள் தூங்கிக் கொண்டிருந்தவேளை அதிலிருந்தும் வெளியேறிய மிதமிஞ்சிய புகையினால் மூச்சுத்திணறி இறந்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, இவர்களது நல்லடக்கம் ஜீபைல் நகரில் நடைபெற ஏற்பாடாகி இருப்பதாகவும் தெரியவருகின்றது.

## இன்று விவசாயிகள் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்குமான விவசாயக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு.பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(க-75)

## மண்டானில் தேடுதல் நடவடிக்கை

(நெல்லியடி)

மண்டான் பகுதி நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற் கொள்ளப் பட்டது.

அப்பகுதி மக்கள் நெசவு நிலையத்திற்கு அருகில் கூட்டிச் செல்லப்பட்டு தலையாட்டிக்கு முன் நிறுத்தப்பட்டனர்.

எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை.

(க-18)


நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி

## அறிவித்தல் - 2000ஆம் ஆண்டு

**01. புலமைப்பரிசில்**

பிரதேச சபை எல்லைக்குள் 1998 ஆம் ஆண்டு க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக் கழகத்திற்கும், 5ஆம் ஆண்டுக்கான 1999 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழுள்ள நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வாழும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு நல்லூர் பிரதேச சபையால் நன்கொடைப்பணம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து தகுதியுடையவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் தமது விண்ணப்பங்களை 25/02/2000 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பிரதேச சபை, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதற்கான விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் காரியாலய நேரத்தில் நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**02. வியாபார வரி உரிமக்கட்டணம்**

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும், உற்பத்தி நிறுவனங்களும், தனியார் வைத்திய நிலையங்கள், வைத்திய ஆலோசனை நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்களும் வியாபார வரிகளையும் வியாபார உரிமக்கட்டணங்களையும் தொழில் மீதான வரிகளையும் எதிர்வரும் 31/03/2000 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் தொழில் மாற்றம் செய்பவர்களும், புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும், தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தருதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்பத்திரத்துடன் அந்நிறுவனத்தின்1999 ஆம் ஆண்டு முடியவுள்ள ஆதனவரி செலுத்திய பற்றுச்சீட்டுடன் கடை வாடகையானால் உரிமையாளரின் சம்மதக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

**03. வாடகைக் கடைகள்**

நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான வாடகை கடைகளுக்கான குத்தகை ஒப்பந்தம் காலாவதியாகியும் குத்தகை உரிமையாளர்கள் அதை புதுப்பிக்காது தொடர்ந்து நடாத்தி வரும் கடைகளுக்கு மீள கேள்வி கோரி குத்தகைக்கு விடப்படவுள்ளது. எனவே எம்முடன் ஒப்பந்தம் செய்தவர்கள் 22/02/2000 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் படியும் ஒப்பந்தம் செய்ய முடியாதிருப்பவர்கள் இதற்கான தங்கள் ஆட்சேபனையை 29/02/2000 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் தலைவர் நல்லூர் பிரதேச சபைக்கு இரு பிரதிகளில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட திகதிகளுக்கு பின்னர் புதுப்பித்தலோ அல்லது ஆட்சேபனையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் இத்திகதியின் பின்னர் கடைகள் சீல் செய்யப்பட்டு மீள் கேள்வி கோரப்படும் எனவும் அறியத்தருகின்றேன்.

க. மணிபல்லவராஜன் (ஜே. பி. யூ. எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
26-01-2000

(கி/37)


## (இராசி பலன்)

28 - 01 - 2000
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு தை 14)

அட்டமி அதிகாலை 6.52 வரை, சுவாதி, அதிகாலை 5.55 வரை, மரணயோகம், இராகுகாலம் காலை 11.36 முதல் 1.04 வரை, சுபநேரம் காலை 7.08 முதல் 8.36 வரை.

**மேடம்:** தியாகசிந்தை, பொருள் வரவு, பிறர்பாராட்டு.

**இடபம்:** நன்மதிப்பு, அறிஞர் சந்திப்பு, விருந்துண்ணல்.

**மிதுனம்:** வாக்குப்பகை, குடும்ப சங்கடம், அலைச்சல்.

**கடகம்:** திடசங்கற்பம், நியாயம் கற்பித்தல், அதிகசெலவு.

**சிங்கம்:** சமயோசித முடிவு, பெற்றோர் ஆசி, நண்பர் கலகலப்பு.

**கன்னி:** அடிமை நிலை, பெண் கோபம், மனச்சலனம்.

**துலாம்:** சுவாரஸ்யம், தொழில் லாபம், புதியசூழ்நிலை.

**விருச்சிகம்:** தைரியக்குறைவு, பகைவர் நட்பு, உடல்பலவீனம்.

**தனுசு:** மனக்கிளர்ச்சி, வீண் செலவு, கடன் கொடுத்தல்.

**மகரம்:** உறவினர் அன்பு, தொழில் மேன்மை, ஒத்துழைப்பு.

**கும்பம்:** சச்சரவு, காரியவாக்கினம், முதியோர் துயரம்.

**மீனம்:** திட்டம் தோல்வி, பண முடை, வெறுப்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## மின்மாற்றி தகர்ப்பு

பதுளையில் கந்தகேர பகுதியில் அமைந்திருந்த அதிசக்தி வாய்ந்த மின்மாற்றியொன்று கடந்த 25ஆம்திகதி குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்மாற்றி முற்றாக சேதம் அடைந்திருப்பதால் இலங்கை மின்சார சபைக்கு 375,000 நஷ்டம் ஏற்பட்டுள்ள அதேவேளை கந்தகேர பகுதிக்கான மின்சாரமும் தடைப்பட்டிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(க- 14)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
பிரபு, ரோஜா நடித்த
**திருநெல்வேலி**
(நேரடி CD)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)



நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
**சூரிய வம்சம்**
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

# செய்தித் துளிகள்

## மைதானம் புனரமைப்பு

யாழ். [illegible] த்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இரண்டு கோடி ஐம்பதுலட்சம் ரூபா செலவில் காண்டாவில்-இருபாலை வீதியிலுள்ள மைதானமொன்று மிகச்சிறந்த விளையாட்டு மைதானமாகப் புனரமைக்கப்பட்டு அதன் மூலம் யாழ். இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தையும் ஒற்றுமை வளர்ச்சியையும் ஏற்படுத்தும் நடவடிக்கை இவ்வருடம் ஆரம்பிக்கப்படும். என்று யாழ்ப்பாண ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பிரதி அமைப்பாளர் அண்மையில் தேசிய இளைஞர்மாவட்ட சம்மேளனமுடனான கலந்துரையாடலில் தெரிவித்துள்ளனர்.

(க-59)

## கல்விக்காக ஒரு இலட்சம் ஒதுக்கீடு

(மந்திகை)

கட்டைவேலி. நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கல்விச் சமூக மேம்பாட்டிற்காக ஒரு லட்சத்து82ஆயிரம்ரூபா ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்க 30 ஆயிரம் ரூபாவும், நூல் நிலையத்திற்கு புத்தகம் கொள்வனவு செய்ய 20 ஆயிரம் ரூபாவும் வீரசிங்கம் மண்டபபுனரமைப்பிற்காக ஒரு லட்சம் ரூபாவும் கல்விக்கழகங்களுக்கு 12ஆயிரம் ரூபாவும், பாலர் பாடசாலைகளுக்கு உபகரணம் கொள்வனவு செய்ய20ஆயிரம் ரூபாவும், மற்றும்தனியார் நிறுவனங்களுக்கு கடன்வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-23)

## புதியமைல்கற்கள் நாட்டுதல்

(ஈச்சமோட்டை)

பளை [வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சாவகச்சேரி- புலோலி வீதியில் ஒரு கிலோமீற்றர் வீதி செப்பனிடப்பட்டு தார் ஊற்றப்பட்டு வருகின்றது.

அத்துடன் யாழ்.மாவட்டபளைப்பிரிவுக்குட்பட்ட வீதிதோறுமுள்ள மைல் கற்கள் அகற்றப்பட்டு புதிதாகக் கிலோ மைல் கற்கள் நாட்டப்பட்டுள்ளன. (க-59)

## சுற்றுநிருபம் அனுப்பிவைப்பு

(மந்திகை)

கடந்த வருடம் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் பெறுபேறுகள் அடங்கிய புள்ளி விபரங்களை கோரி வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுசுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளது.

[க-23]

## யுவதி வீடுதிரும்பினார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 19ஆம் திகதியாழ்ப்பாணத்திலுள்ள ,மருத்துவ ''கிளினிக்'' ஒன்றிற்கு வந்தவேளை காணவில்லை என்று பெற்றோரினால்மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டு தேடப்பட்டு வந்த ஆறுமுகம் கௌசல்யா (21வயது) அவரது சிநேகிதர் ஒருவரின் வீட்டில் இருந்து மீண்டும் வீட்டிற்கு வந்துள்ளார்.

(க-14)

## பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

(கரணவாய்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களிற்கு இலவசமாக எழுது பொருட்கள், அப்பியாசக் கொப்பிகள் என்பன வழங்கப்படுகின்றன.

இவ்வகையில் இமையாணன் அ.த.க வித்தியாலயத்திலும் கரணவாய் மணியகாரன்தோட்டப்பாடசாலையிலும் இப் பொருட்கள் வழங்கப்பட்டன.

(க-27)

## அதிபருடன் இயங்கும் பாடசாலை

(அல்லைப்பிட்டி)

மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படாது அதிபருடன் மாத்திரம் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் இரண்டு தொண்டர் ஆசிரியர்கள் மட்டுமே பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கடமை புரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அண்மையிலேயே இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-46)

## குழாய்நீர் விநியோகம் ஸ்தம்பிதம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் குழாய் நீர் விநியோகச் சேவை ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீருக்காக நீண்டதூரம் செல்ல வேண்டி உள்ளது என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சாராப்பிட்டியில் உள்ள கிணறுகளில் இருந்து நடுக்குறிச்சி கிழக்குப் பகுதிகளுக்குநீரை எடுத்து வரும் நிலத்திற்கடியிலான குழாய்களில் ஏற்பட்டவெடிப்பே நீர் விநியோகம் தடைப்பட்டதற்கு காரணம் என மேலும் தெரிய வருகின்றது.

அண்மையில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் இக் குழாய் நீர் விநியோகம் புனரமைத்துக் கொடுக்கப்பட்டு இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-5)

## நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள்

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் சில ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல். கண்ணிவெடி புதைக்கப்பட்டிருப்பதால் பாவிக்க முடியாத நிலையிலுள்ள பளை விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்தல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் புதிய ''பாண்ட்'' அணியினரை உருவாக்கல் போன்றனவாகும். (க-59)

---

தமிழர் இரண்டாம்தர பிரஜை என்ற

# நிலைமை நீங்கும் வரையில் இலங்கையில் சமாதானம் கிடையாது

## -இந்து பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழரை இரண்டாம் தரப் பிரஜைகளாக சிங்கள மக்கள் கருதிச் செயற்படும் வரையில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு 'இலங்கையில் உள்நாட்டு யுத்தம்' என்ற தலைப்பில் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஏ.பி. வெங்கடேஸ்வரன் தெரிவித்துள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; 1957ல் உருவாக்கப்பட்ட பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் 1965இல் உருவாக்கப்பட்ட சேனநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை என்பவை தமிழர்களுக்கு பல உரிமைகளை வழங்குபவையாக இருந்த போதிலும் எழுதிய மை காயும் முன்னமே அவை நிராகரிக்கப்பட்டன.

இந்த நிலைப்பாடுதான், தமிழர் இன்று தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து ஆயுதமேந்திப் போராட பின்னணியில் இருந்தது என்பது தான் உண்மை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க 1994 தேர்தலின் போது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று கூறியே ஆட்சியைக் கைப்பற்றிய போதும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் வென்று விட்ட இற்றைக் காலம் வரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவில்லை.

தமிழருக்கு சுயாட்சி, அதிகாரப் பகிர்வு என்பவை தொடர்பான வாய்மூல உறுதிமொழிகளே அதிகளவில் கொடுக்கப்பட்டனவே தவிர அவை தொடர்பாக சிங்களத்தரப்பில் இருந்து உருப்படியான் நடவடிக்கைகள் எவையுமே எடுக்கப்படவில்லை.

உள்நாட்டு யுத்தத்தால் தமிழ், சிங்கள தலைமைகளிடையே ஐயுறவு தான் கட்டிவளர்க்கப்பட்டுள்ளது. இரு தரப்பும் ஒருவரை ஒருவர் நம்புவதற்குத் தேவையான தன்மைகள் ஏற்படுத்தப்படுமிடத்து தான் நாட்டில் சமாதானம் மலரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

(க-9)

யாழ்ப்பாணக் குடாநாட்டில்

# 13 ஆயிரத்து 500 சிறுவர்கள் பெற்றோரை இழந்த நிலையில்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த வருடம் திரட்டப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியிலான புள்ளி விபரங்கள் பிரகாரம் மொத்தமாக 13 ஆயிரத்து 500 சிறுவர்கள் தமது பெற்றோர்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இத்தொகையில் மிகவும் சொற்ப எண்ணிக்கையினர் மட்டுமே மாவட்டத்தில் சில அமைப்புகளால் நடாத்தப்பட்டு வருகின்ற சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏனையவர்களில் பெரும்பான்மையோர் தமது உறவினர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் மொத்தத் தொகையில் சுமார் 50 சதவீதத்தினர் வறுமை, ஆதரவு இன்மை, போதிய வழிகாட்டல்கள் இல்லாமையினால் பாடசாலைக் கல்வியை இடை நடுவில் கைவிட்டு பல்வேறு விதமான தொழில்கள் பழகுவதில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் சிறு கைத்தொழில் நிலையங்கள், வாகனங்கள் பழுதுபார்க்கும் இடங்கள் மற்றும் உணவகங்களிலும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

(க-77)

# நியமனம் பெற்ற இலிகிதர்களுக்கு மேலதிகப் பயிற்சி வழங்க நடவடிக்கை

## செயலக வட்டத்தினர் தெரிவிப்பு

[அச்சுவேலி]

அண்மைக் காலங்களில் புதிதாக எழுதுவினைஞர்களாக நியமனம் பெற்றுள்ள 160 பேருக்கு யாழ். செயலகத்தினால் மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் பிரிவுகளாகவழங்கப்படும் என்று தெரிவித்துள்ள அவர் ஒவ்வொரு பிரிவிலும் 40 பேர் வீதம் அனுமதிக்கப்படுவர் என்று மேலும் தெரிவித்துள்ளனர். (க-14)

குடும்ப வறுமை காரணமாக

# பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு கல்வி வசதிகள் வழங்கப்படும்

## செயல்திட்ட அலுவலர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமை ,சீருடைப் பிரச்சினை மற்றும் குடும்ப வறுமை காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லாத 5வயதிற்கும் 14வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான சகல வசதிகளும் அளிக்கப்படுமென யாழ்.கல்விவள முறைசாரக் கல்விப்பிரிவின் செயற்திட்ட அலுவலர் ச.சிவானந்தம் தெரிவித்துள்ளார்.

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக்கு செல்லாது வீட்டில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் இது சம்பந்தமாக தம்முடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் கல்விக்கு இடையூறு இல்லாது உரிய ஒழுங்குகளை உடன் மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

# எல்லே விளையாட்டுப்போட்டி 29. 30 ஆம் திகதிகளில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக பிரிவினரால் இலங்கைஎல்லே சம்மேளனத்தின் சட்ட விதிகளுக்கமைய நடாத்தப்படும் எல்லே விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுமென யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன்தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளில் பெண்கள் அணியில் சென்.அன்ரனிஸ், யுத்காமல், சென்றோகஸ், சென்நீக்கிலஸ், குருநகர் பமிலியன் விளையாட்டு கழகங்களும் ஆண்கள் அணியில் சென் றோக்ஸ், சென் நீக்கிலஸ், ஜெட்லைன்ஸ், குருநகர், பாரதி, யுத்காமல், சென். அன்ரனீஸ், கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றவுள்ளன. (க-14)

## கடற்றொழிலாளர் கவலை

(சாவகச்சேரி)

கிளாலிப்பகுதி கடற்றொழிலாளர்களினால் பிடிக்கப்படும் மீன்களை உரியமுறையில் சந்தைப்படுத்துவதற்கு அப்பகுதி மக்கள் இடைஞ்சலாக உள்ளதாக கடற்றொழிலாளர் தெரிவிக்கின்றனர்.

கடலில் பிடிக்கப்படும் மீன்களில் நல்லின மீன்களை கரையோரங்களில் மக்கள் வாங்கி விடுவதனால், எஞ்சிய மீன்களையே விற்பனை செய்யக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பகுதிக்கு வரும் வியாபாரிகளிடையேயும் மக்களின் தொந்தரவுகள் தொடர்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது பற்றிகிளாலி கடற்றொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை எனவும் அப்பகுதி கடற்றொழிலாளர் கவலை தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

(க-21)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அருள்மிகுஸ்ரீஞானவைரவர் ஆலய தொண்டர் சபையின் 2ம் ஆண்டு பொதுக் கூட்டம் ஆலய பரிபாலன மடத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. க. மகேஸ்வரன், உபதலைவர். திரு. அ. செல்லையா, செயலாளர். செல்வன். செ. செந்தூரன், உபசெயலாளர். செல்வன். வ. வசிகரன், பொருளாளர். திரு. ஐ. கைலாயநாதன். ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். 6பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. (க)

# ஒரு நாட்டின் சுகாதார சேவைகளின் தரத்தை கர்ப்பிணித் தாய்மாரின் மரணம் நிர்ணயிக்கின்றது

செல்வி கி. ஜயந்தினி
(4-ஆம் வருடம் மருத்துவபீடம்)

தாய்மை சமுதாயத்தினால் எதிர்பார்க்கப்படும், மதிக்கப்படும் பெண்ணுக்கேயுரிய சிறப்பு ஆகும். ஒரு குழந்தையின் வருகைக்காக தாய் தன் உயிரையே பணயம் வைத்து தாய்மையை ஏற்கிறாள் என்று கூறினால் மிகையாகாது.

வருடந்தோறும் 600,000 கர்ப்பிணிப் பெண்கள் தமது உயிரை தியாகம் செய்கிறார்கள். இது பெண்களின் அடிப்படை ஆரோக்கியமும், உடல் நலமும் பாதிக்கப்பட்டுள்ளதையே காட்டுகின்றது. தவிர்க்கக்கூடிய இந்த மரணங்கள் இதுவரை தவிர்க்கப்படாதிருத்தல் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, மனித உரிமை மீறலென்றே கூறலாம்.

ஒரு பெண் சிசுவை வயிற்றில் சுமந்து, பிரசவித்து, பாலூட்டி நலமாக வாழ்ந்து குடும்பத்தைப் பேணுவது சாதாரண உடல், உள, சமூக செயற்பாடாகும்.

கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பமடைதலுடன் தொடர்பாக இறக்க நேரிட்டால் அதனை கர்ப்பிணித்தாய் மரணம்என அழைக்கிறோம். ஒரு தேசத்தின் அடிப்படை சுகாதார சேவைகள் எவ்வளவு தரம் வாய்ந்தவை என்பதை கர்ப்பிணித்தாய் மரண வீதம் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது.

குழந்தையின் வரவை குதூகலத்துடன் வரவேற்கும் நாம் அதற்காக தாய் கொண்டிருக்கவேண்டிய உடல் நிலை, போஷாக்கு நிலை, பிரசவத்தின்போது எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள், பிரசவத்தின் பின் கவனிப்புபற்றி அக்கறை காட்டுவது குறைவு எனலாம்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் இடையில் வாழ்க்கைத் தர வேறுபாடுகள் காணப்படுவதுண்டு. ஆனால் கர்ப்பிணித் தாய் மரண வீதம் மற்றவைகளைக் காட்டிலும் மிகப் பாரிய வேறுபாட்டை காட்டிநிற்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| ஆபிரிக்கா | 16 | இல் | ஒரு பெண் |
| இலங்கை | 230 | இல் | ஒரு பெண் |
| அபிவிருத்தி அடைந்த நாடுகள் | 4000 | இல் | ஒரு பெண் |

என்ற விகிதத்தில் கர்ப்பகாலத்தில் மரணமடையும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளனர்.

கர்ப்பிணித்தாய் மரணங்கள் தொடர்பான புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு இவ்வளவு பேர் தான் இறந்துள்ளனர் என்று யாரும் சரியாக கூறமுடியாது. உண்மையான மரணங்கள் புள்ளிவிவரங்களை விட அதிகமானதாகவே இருக்கும் என்பது வெளிப்படை.

இலங்கை - கர்ப்பிணித் தாய் மரணம் /100,000 சிசு பிறப்புகள்.

| | |
|---|---|
| 1940-45 | 1500 |
| 1950-55 | 555 |
| 1980 | 95 |
| 1999 | 30 |

உலகில் ஏற்படும் கர்ப்பிணித்தாய்மார் சில குறிப்பிட்ட மருத்துவச் சிக்கல்கள் காரணமாகவே மரணிக்கிறார்கள். குருதிப்பெருக்கு, உயர்குருதிஅமுக்கம், நோய்த்தொற்று, சட்டபூர்வமற்ற கருச்சிதைவு, சிக்கலான தடைப்பட்ட பிரசவம் (Obstructed) ஆகியன இவற்றினுள் முக்கியமானவையாகும்.

குருதிச்சோகை, மலேரியா, இதயநோய் போன்றவற்றினாலும் மயக்க மருந்து கொடுப்பதினால் ஏற்படும் சிக்கல்களினாலும் சில இறப்புக்கள் நேரிடுகின்றன.

பிரதானமாக, குருதிப் பெருக்கினால் 25% மரணம் சம்பவிக்கின்றது. இந்நிலையானது முன்கூட்டியே எதிர்வு கூறமுடியாதது. அதிகபிள்ளைகளைப் பெற்ற தாய்மார், குருதிச்சோகை உள்ளவர்கள் என்பவர்களில் குருதிப் பெருக்கு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகும். வைத்தியசாலையில் பிரசவம் நடைபெறும்போது தாயின் இறப்பு பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றது.

நோய்த்தொற்று; இதனால் சட்டபூர்வமற்ற கருச்சிதைவின் பின் முக்கியமாக தாய் பாதிக்கப்படலாம். சுகாதாரமற்ற பிரசவப்பேறும் நோய்த்தொற்றும் ஏற்படஏதுவாகின்றது. முன்னைய காலங்களைவிட தற்போது நோய்த்தொற்றின் (Sepsis) தாக்கம் குறைந்துள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது.

13% கர்ப்பிணித் தாய் மரணங்கள் சட்டபூர்வமற்ற பாதுகாப்பற்ற கருச்சிதைவால் ஏற்படுகிறது. என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தாய்மார்கள் குடும்ப திட்டம் ஒன்றை பின்பற்றாததால் தேவையற்ற தாய்மையை ஏற்க நேரிடுகிறது. பின் கருச்சிதைவுக்காக சுகாதார அடிப்படை மருத்துவ வசதிகளற்ற வினைத்திறன் குறைந்த சட்டபூர்வமற்ற கருச்சிதைவாளர்களை நாடுகின்றனர்.

இலங்கையில் வருடந்தோறும் 125,000-175,000 வரையான பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (1997).

கருச்சிதைவின் பின் ஆபத்தான நிலையில் பல பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு புனர்ஜென்மம் எடுக்கிறார்கள். பலர் இறந்து போகின்றனர். இவர்களின் மரணம் சாதாரண மரணமாகவே வெளிக்காட்டப்படுகிறது. உண்மையான காரணம் மறைக்கப்படுகிறது.

சாதாரணமாக கருச்சிதைவானது சட்டபூர்வமற்றதாக இருப்பது பெண்கள் நடைபாதை கருக்கலைப்பு நிலைக்கு இட்டுச் செல்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

உயர் குருதி அமுக்கமானது கர்ப்பிணிப் பெண்ணின் உடலில் தோற்றுவிக்கும் பாதக நிலையால் 12% கர்ப்பிணித் தாய் மரணங் ஏற்படுகின்றன. முகம், கை, கால்கள் வீங்குவதுடன், இரத்தப் பெருக்கு, பனிக்குட நீர் வெளியேறல் ஆகிய அறிகுறிகள் தென்படின் உடன் வைத்திய உதவி நாடப்படுதல் அவசியமாகும். பிரசவத்தின் முன்பான வைத்திய பராமரிப்பின் போது நேர காலத்துடன் உயர் குருதி அமுக்கத்தை கண்டுபிடித்து உரிய சிகிச்சை செய்வதன் மூலம் தாயை பாதுகாக்கக் கூடியதாக இருக்கும்.

கர்ப்பிணிப் பெண்களில் பல மருத்துவச் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணமாக குருதிச்சோகை விளங்குகிறது. நமது உடல் உயிர் வாழ்வதற்கு தேவையான ஒட்சிசன் காவிச் செல்லும் பதார்த்தம் ஈமோக்குளோபின் எனப்படும். அப் பதார்த்தம் சாதாரணமாக இருக்க வேண்டிய அளவை விட குறையும் போது (11g/dl ற்கு குறைவாக வரும் போது) இது குருதிச் சோகை என அழைக்கப்படுகிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏறத்தாழ 60% கர்ப்பிணிப் பெண்கள் குருதிச் சோகையினால் பாதிக்கப்படுகின்றனர்.

போதிய சத்தான உணவு கிடைக்காமை, குடற்புழுக்கள் மலேரியா நோயின் தாக்கம் ஆகியவற்றினால் குருதிச்சோகை ஏற்படுகின்றது. இதனால் பிரசவத்தின் போது குருதிப் பெருக்கு, கிருமித் தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

### தாய்மையின் போது சிக்கல்களைத் தோற்றுவிக்கும் காரணிகள்

ஓர் சமுதாயத்தில் உள்ள எல்லா கர்ப்பிணிப் பெண்களும் ஒரே மாதிரியான ஆபத்தை எதிர்நோக்குவதில்லை. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் ஆபத்து குறைந்த பிரசவங்களைக் கொண்டிருப்பர்.

பெண்ணின் உடலமைப்பு, போஷாக்கு நிலை, வயது, கடந்த பிரசவங்களின் எண்ணிக்கை, பிரசவ இடைவெளி ஆகியன தாய்மையின் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் காரணிகளுள் பிரதானமையாகும்.

பருவமடைந்த பின் பெண்களின் உடலமைப்பு விருத்தி அடைவதற்கு சில ஆண்டுகள் தேவைப்படுகின்றன. தாய்மையை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரமுன்னரே விடலைப்பருவத்தில் (teenage) பெண்கள் தாயாகிறார்கள். தாயே இன்னமும் வளர வேண்டிய நிலையில் ஒரு குழந்தையை வளர்க்கும் பொறுப்பும் கொடுக்கப்படுகிறது. இந்த ஆரோக்கியமற்ற தன்மையால் பிரசவம் சிக்கலாக்கப்படுகின்றது. முக்கியமாக பெண்ணின் இடுப்பு என்பு சிறிதாகவும் சிசுவின் தலை பெரிதாகவும் உள்ள பொருந்தாத நிலையும் (ceb haio belvic disbio potion) இதில் ஒன்றாகும்.

அமெரிக்க ஆய்வு ஒன்றில், 20-24 வயதுக்குட்பட்ட தாய்மாரின் மரணங்களை விட 15 வயதிற்குட்பட்ட கர்ப்பணித் தாய்மாரின் மரணங்கள் 3 மடங்கு அதிகமாக இருந்தது என்பது அறிவிக்கப்பட்டுள்ளது:

(தொடரும்)

# ஈராக்கின் எண்ணெய் உற்பத்தி பாதிப்பு அடையும் வாய்ப்பு உண்டு

## ஐ.நா.செயலர் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கின் எண்ணெய்உற்பத்தி தொழிற்சாலைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் வழங்குவதை ஐ.நா பாதுகாப்புச் சபை தொடர்ந்து தடை செய்து வருமானால் ஈராக்கின் எண்ணெய் தொழில் துறை பாதிக்கப்படுமென ஐ.நா பொதுசெயலாளர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் எண்ணெய் கைத்தொழில் துறை மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்து உள்ளது. இதனை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இதன் விளைவாக உலகில் உள்ள பல நாடுகளும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பாதிப்படையக் கூடிய நிலைமை விரைவில் ஏற்படக் கூடும் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-14)

# மத்திய கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க மேற்குலக நாடுகள் முன்வரவேண்டும் - நெல்சன் மண்டேலா

(நைரோபி)

மத்தியகிழக்கு பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதிலும்பார்க்க தங்கள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பதிலேயே மேற்குலகத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளதாக தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன்மண்டேலா, அமெரிக்கஜனாதிபதி பில்கிளிங்டன் மீதும் ஏனைய தலைவர்கள் மீதும் குறை கூறியுள்ளார்.

மத்திய கிழக்கிற்கான பொருத்தமான தீர்வொன்றை மேற்குநாட்டுத் தலைவர்களால் கடந்த 25 வருடங்களில் கொண்டுவர முடியவில்லை ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளேயே முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள்.

மத்தியகிழக்குச்சமாதானம் என்பது முக்கியமான தொன்றாகாவே உள்ளது. ஆகையினாலே இந்தப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட மக்களின் உயிர்களுடன் விளையாடுவதையும்மேற்குலகசக்திகள் தங்களுக்குள் போட்டியிடுவதையும் நிறுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வர வேண்டும்என்றும் அந்நாடுகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-14)

# ரஷ்யாவில் குண்டு வெடிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் வடக்கேயுள்ள இங்கு ஷேதியாவிலுள்ள மேல் நீதிமன்றக் கட்டடத்தில் பாரியகுண்டு ஒன்று வெடித்துள்ளது.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது நீதிமன்ற கட்டடத்தில் பலர் இருந்ததாகக் கூறப்பட்டுள்ள போதிலும் சேத விபரங்கள் குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

(க-14)

# 10 வயது சிறுமி முதலையால் இழுத்துச் செல்லப் பட்டார்

மலேசியாவில் முதலை ஒன்று 10 வயதுச் சிறுமி ஒருத்தியை நதிக்குள் இழுத்துச் சென்றுவிட்டதால் அப்பகுதிக் கிராமவாசிகள் பெரிதும் அச்சத்துடன் வாழ்க்கை நடாத்துகின்றனர்.

பிரஸ்தாப சிறுமியை காப்பாற்றும் முயற்சி வெற்றியளிக்கவில்லை என தெரியவருகிறது.

பட்டாங் சட்டோங் என்ற இந்தப் பிரதேசம் முதலைகளுக்கு மிகவும் பெயர் போனது என்றும், பல ஆண்டுகளாகவே மனிதர்கள் முதலைக்குப் பலியாகி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சிறுமி நதிக்கரையோரத்தில் தனது பாட்டியாருடன் இறால் பிடித்துக் கொண்டிருக்கையில் பலபேர் முன்னிலையிலேயே முதலையால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றாள்.

இதனால் இப்பகுதி மக்களிடையே முதலை பற்றிய பயம் இன்னும் அதிகரித்துள்ளது. (க-9)

# சிரிய - இஸ்ரேலிய பேச்சுக்கள் பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

(சிரியா)

இஸ்ரேலுக்கும் சிரியாவிற்குமிடையே நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட மந்த நிலையைப் போக்குவதற்கு கோலான் மலைக் குன்றுகளில் இருந்து 'இஸ்ரேலியர்கள் வாபஸ் பெறப்பட வேண்டும் என சிரியா அமைப்பொன்று கோரியுள்ளது.

இவ்வாறு கோரிக்கை விடுவித்துள்ள சிரியாவின் உயரிய அமைப்பொன்று இஸ்ரேலியர்கள் வாபஸ் பெறப்படாவிட்டால் இஸ்ரேலுக்கும், சிரியாவுக்குமிடையே சமாதான உறவுகள் ஏற்படாது எனவும் அறிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலுக்கும் சிரியாவிற்குமிடையேயான அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைகள் பிற் போடப்பட்டபோதும் இரு நாடுகளும் சமாதானத்தையே விரும்புவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மெடலின் அல்பிரைட் கூறியுள்ளார்.

இருப்பினும் இரு தரப்பும் ஒன்றையொன்று நம்பத் தயங்குவதே சமாதானத்திற்கான தடையாகவுள்ளது.

(க-14)

வேலன்று வெற்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்
- குறள்

# வலம்புரி

## சிந்தனையில் மாற்றம்

மிகப்புரதான காலந் தொட்டே இரு வேறுபட்ட இனங்கள் இலங்கைத் தீவை தமது உடைமையாக பங்கு போட்டு வைத்திருக்கின்றன. இந்த இரு இனங்களும் மதம், மொழி, நடைமுறைகளில் பரந்தளவு வேறுபாட்டைக் கொண்டுள்ளன. என 1799 இல் இலங்கையின் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது செயலாளராக இருந்த சேர் ஹக்கிளே கோர்ன் எழுதியிருந்தார்.

இலங்கையின் சனத் தொகையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக விளங்கும் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப் படுவதை ஒரு போதுமே இணங்க மாட்டார்கள். அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் அல்ல என்ற சிந்தனை பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் உதயமாகும் வரை இனப் போராட்டம் தொடர்வதற்கே இடமுண்டு.

நாட்டில் வகைதொகையான அநாவசியமான கைதுகள், அர்த்தசாமத்தில் மந்தைகள் போல் வீதியால் நடத்திச் செல்லல், பாதுகாப்புத்தர வேண்டியவர் வேலி பயிரை மேய்வது போல் மானத்தைப் பறித்தல் போன்றவை தொடர் கதையாக இருக்கும் வரை நம்பிக்கை ஒளிக் கீற்றுக்கள் கூட அத்தமித்து விடும்.

மனிதம் செத்து விட்டால் நாடு சுடுகாடாகி விடும்; பண்பு மலையேறி விடும். அர்த்த மற்ற வாழ்வு தலை தூக்கும். அந்த நிலையில் கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில் கடும்புலிவாழும் காடு நன்றே என்ற அனுபவ மொழி மக்களை அரவணைக்கத் தொடங்கும்.

காலம்காலமாக ஏமாற்றப் பட்டு அரசியல் சகதியில் அல்லலும் மக்களுக்கு நிதானமான ஒரு நெறியில் நின்று நீதி செய்ய வேண்டும். எல்லா வகைத் தானங்களிலும் தமிழர் சமுதாயம் வேண்டி நிற்கும் தானம் நிதானம் ஒன்றே. அது கைவரப் பெற்று- தன்னெஞ்சறிவது பொய்யாதிருக்க வகை செய்யின் நாடு நலிவிலிருந்து காப்பாற்றப் படும்.

தொடரும் போரினாலும், பகைமைப்புயலினாலும், பிறர் தமர் என பார்க்கும் நய வஞ்சக சிந்தனையாலும் துடிக்கும் இளமைகள் கொதிக்கின்றமை சகயமே.

- அன்புடன் ஆசிரியர்

# 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திருத்த சட்ட மூலம் இலங்கை ஒற்றை ஆட்சி எனவும் புத்தமதம் அரசமதம் எனவும் உறுதி செய்தது

- சமாதானப் பேரவை

டட்லி-செல்வா ஒப்பந்தசட்டவரைபுபாராளுமன்றத்தில் கடும்எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டதென்று நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி

மொழிமாற்றம் ஆனந்தன்-

1978 ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் அமைப்பு திருத்தியமைக்கப்பட்ட போது இவ்வரசியல் அமைப்பின் கீழ் இலங்கை ஒற்றை அரசாகவும், புத்தசமயம் முதல் மதம் எனவும் உறுதிப் படுத்தப்பட்டதுடன் சிங்கள மொழி அரசரும மொழி எனவும், சிங்கள, தமிழ் மொழிகள், தேசியமொழிகள் எனவும் அறிவிக்கப்பட்டது. பிரஜாவுரிமை தொடர்பான பாகுபாடு தீர்க்கப்பட்



ஜே. ஆர். ஜெயவர்த்தன

டன். இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை இதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டன.

### பயங்கர வாதத்தை தடுக்க நடவடிக்கை

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே. ஆர் தெரிவு செய்யப்பட்டதும் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்



அ. அமிர்தலிங்கம்

அதுவும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பதாக அதாவது ஆறு மாதங்களுக்கிடையில் தமிழ் தீவிரவாதத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென தீர்மானம் எடுத்தார். இத் தீர்மானத்துக்கமைய தமிழ் தீவிரவாதத்தை ஒடுக்க இராணுவ பிரிகேடியர்ஒருவர்அனுப்பப்பட்டார். யாழ். மாநகரசபை முதல்வர் அல்விரட் துரையப்பா படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டிருந்த இன்பம் என்னும் இளைஞரும் எந்த விதமான குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாமல் இருந்த அவர்களது மைத்துனரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் மறுநாள் அவரது சடலங்கள் யாழ்ப்பாணத்தில் வடிகால் ஒன்றின் அருகில் போடப்பட்டிருந்தன. அவர்களது சடலங்களில் சித்திரவதைக்குள்ளான காயங்கள் காணப்பட்டன.

இச்சம்பவமானது தமிழ் மக்களுக்கே விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மட்டுமன்றி ஒரு அரச பயங்கரவாத சவாலாகவும் இருந்தது என தமிழ் அரசியல் வாதிகள் சுட்டிக்காட்டினர். வட பகுதியில் ஆயுதக் குழுக்கள் விரைவாக வளர்ச்சி அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது என அரசியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டினர்,

### பிரதேச அபிவிருத்திச்சபை

1980 இல் பிரதேச அபிவிருத்திச்சபைக் சட்டத்தை உருவாக்குவதற்காக பத்துப் பேர் கொண்ட ஜனாதிபதி கமிட்டிஒன்று நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளடக்கிய போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதிநிதிகள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

### யாழ். பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டது.

1981-ல் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் ஆயுதபாணிகளாக யாழ்ப்பாணத்துக்குச் சென்ற குழுக்களினாலும் யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. தேர்தலும் குழப்பி அடிக்கப்பட்டது. இச் சம்பவங்கள் அனைத்தும்யாழ்ப்பாணத்தில் நடந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் காமினி திஸாநாயக்கா யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் தங்கி இருந்தார். இதனால் இச் செயல் அரசாங்கத்திற்கு தொடர்புடைய அரசியல் வாதிகளால் திட்டமிடப்பட்டதாக குற்றம் சுமத்தப் பட்டது. யாழ். நூலகத்தில் இருந்த உலகில் பெறுமதி மிக்க சுமார் 95 ஆயிரம் புத்தகங்கள் எரிந்து சாம்பரானது.

### 1983-ம் ஆண்டு சம்பவங்கள்

1983-ம் ஆண்டு நாடு முழுவதும் குழப்பத்தில் ஏற்பட்டது. 1983-ல் திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தில் 13 இராணுவ சிப்பாய்கள் கொல்லப் பட்டதற்கு பதிலடியாக கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதல்களுக்கு சிங்களக் காடையர்கள் பயன்படுத்தப்பட்டதுடன் பொலிஸ், இராணுவ பாதுகாப்புகளும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் முக்கிய தலைவர்கள் இத் தாக்குதல்களுக்குத் துணையாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் மாதக்கணக்காக அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் போராளிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

### அரசியல் அமைப்பின் ஆறாவது ஷரத்து திருத்தம்

1983-ம் ஆண்டின் கறுப்பு யூலையின் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்



ராஜீவ்காந்தி

பட்ட ஆறாவது ஷரத்துத் திருத்தம் காரணமாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை பறியோயின. இத் திருத்தத்தின் கீழ் தனிநாடு பற்றிப் பேசுவது தடைவிதிக்கப்பட்டது.

### சர்வகட்சி மாநாடு

1984-ம் ஆண்டு அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வ கட்சி மாநாட்டில் சிறிலங்கா



ஆர். பிரேமதாஸ

சுதந்திரக் கட்சி, மற்றும் மகாஜென எக்சத் பெரமுன ஆகிய இரு கட்சிகளும் கலந்து கொள்ளவில்லை. சர்வகட்சி மாநாட்டிற்காக நியமிக்கப் பட்ட கமிட்டிகளின் கடமைகள் தொடர்பான கருத்து வேறுபாடு காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன சர்வகட்சி மாநாட்டில் இருந்து விலகின. இதனால் சர்வகட்சி மாநாட்டு எதுவிதமான முடிவுகளையும் எடுக்க முடியாது பலனற்றுப் போயின.

### ஜே. ஆர் - ராஜீவ் பேச்சுவார்த்தை

1985ம்ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுக்கள் ஆரம்பமாகின.

போர்நிறுத்தம்; அதிகாரப் பரவலாக்கல், சுயநிர்ணய உரிமை ஆகிய அம்சங்கள் தொடர்பாகபேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. இம் முயற்சியும் எத்தகைய பலனையும் தரவில்லை. திம்புப் பேச்சு வார்த்தை கூட தீர்க்கமான பலன் எதனையும் தரவில்லை.

### டில்லி உடன்படிக்கை

இலங்கை ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் நகல் உடன்படிக்கை ஒன்று ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் சகோதரரான எச். டபிள்யூ ஜயவர்த்தனாவினால் இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஷ்பண்டாரி அவர்களினதும் 1985ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தாயாரிக்கப் பட்டது. இவ்வாலோசனையை விடுதலைக் கூட்டணி டி. என். எல். எல். ஆகியவை நிராகரித்தன,

(தொடரும்)

## இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் கும்பாபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் இன்று முற்பகல் 9. 30 மணியளவில் நடைபெறவுள்ளது.

## யூரியா உரம் எடுத்துவரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளின் விவசாய தேவை கருதி 'கிரிந்த' கப்பலில் கமநலச் சேவை நிலையத்திற்கு 1250 மெற்றிக் தொன் யூரியா எடுத்து வரப்பட்டுள்ளது.

கமநலச்சேவை நிலையங்களின் ஊடாகவும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் இந்த உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் தற்போதைக்கு உரத்தட்டுப்பாடு இல்லையென கமநலச்சேவை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்விவலய பாடசாலைகளிற்கான வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடத்தின் 9ம் தரத்திற்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (வ)

### ஆனையிறவுயுத்தத்தில் மட்டும்

# 12உயர்இராணுவ அதிகாரிகள் பலி!

# 1040 படையினர் காயமடைந்தனர்

(கொழும்பு)

ஆனையிறவில் நடந்த யுத்தத்தினால் அதி உயர் தரத்தைச் சேர்ந்த 12 இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டும் 148 இராணுவ அதிகாரிகள் மரணமடைந்தும் 1040 இராணுவத்தினர் காயமடைந்தும் உள்ளதாக யாழ். மாவட்ட முன்னாள் இராணுவத்தளபதி சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்,

இராணுவத்தளபதி ஸ்ரீலால் வீரசூரிய, வன்னி மாவட்ட முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல்ல ஆகியோர் கலந்து கொண்ட இம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனையிறவு இராணுவ தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலை நாம் முறியடித்துள்ளோம். விடுதலைப் புலிகளின் ஷெல் இலக்கிலிருந்து எமது இராணுவ முகாம் தூரத்தில் இருப்பதால் எமக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

இராணுவ தளபதி ஸ்ரீலால் வீரசூரிய தெரிவிக்கையில் 15 ஆயிரம் பேர் புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ளனர் என்றும் இவர்களுக்கு 4மாத பயிற்சி வழங்கப்பட்டு வடக்கு-கிழக்கு யுத்த முனைக்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்,

இராணுவத்தினருக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 1ஆம் திகதியிலிருந்து 5 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

**எங்கும்...**

சத்தம் கேட்டதை அடுத்து எனது மண்டையில் இரத்தம் வடிந்தது அருகில்பலரது அவலக்குரல்களைத் தான் கேட்டதாகவும் தெரிவித்தார்.

**மட்டக்களப்பு...**

இப்பகுதி வர்த்தகர்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கடையடைப்பினை மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அமைப்பு மேற்கொண்டுள்ளனர்.

**குண்டுவெடிப்பில்...**

சிவபாதம், விஸ்வலிங்கம், மோகனபாலன், சந்திரகாந்தன், கஜேந்திரராஜ் கந்தசாமி, நவன், இராமச்சந்திரன் சுபாஸ்கரன், கீதன், துளசி, சிவபாலினி, புஸ்பவதி நவம், சிறிநந்தினி, தனேஸ்வரி, கலைச்செல்வி, குணவதி சிவானந்தன், குமார்.

காயமடைந்த இராணுவத்தினரின் பெயர் விபரம் வருமாறு, லயலால், நெல்சன் குணதிலக்கா, அஜித்குமார குலதுங்க' அனுரா சாந்தா, திசநாயக்கா, தர்மரத்தின, ரூபன்குமார, திலீப் சரத் குணத்திலகபண்டார காமினி எக்கநாயக்கா, சாந்தா, விஜயகுமார, அசந்த பெரேரா, தர்மசேன, பந்துல ஜெயரட்ண மிஸ்கீன், பிரேமரத்தினா, ஜிவன்குமார,

**ஆணைக்குழு...**

புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

மேற்படி 11 பேரும் துன்புறுத்தல்களுக்கு இலக்காகினார்களா என்பது குறித்தும் இவர் கேட்டறிந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது [க-]

**பிரதம...**

பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவப் தெரியவருவதாவது. தினமும் காலை வேளையில் அதிகமானோர் தபாற்கந்தோர் வருவது வழக்கம். இராணுவத்தினரும் தம்முடைய சம்பளப்பணத்தை மணியோடர் மூலமாக தமது உறவினர்களுக்கு அனுப்புவதற்கு வருவார்கள் என்றும் இவர்களைக் குறிவைத்தே இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பில் 12 பெண்கள் உட்பட காயமடைந்த 54 பேரில் 24பேர்கள் அனுராதபுரம் வைத்தியசாலையிலும் ஏனையோர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனுராதபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டவர்களில் 22 இராணுவத்தினரும் இரண்டு பொது மக்களும் அடங்குவர்.

அப்பாப்பிள்ளை சந்திரன் என்பவர் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகையில் மரணமானார். அனுராசபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒன்பது...**

சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மற்றொரு ஆணின் சடலம் இது வரை அடையாளம் காட்டப்படவில்லை.

கொல்லப்பட்ட இராணுவத்தினரின் விபரம் வருமாறு: றோகணகுமார பண்டார, ஜெயத்திலக, குணரத்ன ஆகியோரது சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## விசேட பொதுக் கூட்டம்

யாழ். மாவட்டப் பயிற்றப்படாத ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் காலாசாலைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான விசேட பொதுக்கூட்டம்.

இடம்:- புதிய உயர் கல்லூரி.
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

காலம்:- 29 - 01 - 2000 சனிக்கிழமை
மு. ப 9-00 மணி.

பயிற்றப்படாத ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம்.

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் ஐந்து மாடிப் பகுதியில் வசித்துவரும் மோகன் நிதர்சன் (வயது 07) என்ற சிறுவன் நேற்று கிணற்றில் தவறி வீழ்ந்ததில் மரணமாகியுள்ளார்.

**நல்லூர்,...**

டித்தும் நல்லூர் பிரதேச சபையின் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

இது குறித்து நல்லூர் பிரதேச சபையின் தலைவர் திரு. க. மணிபல்லவராஜன் விடுத்த செய்தியில்

கடமையில் ஈடுபட்டிருந்த பொது சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கியோர் இதுவரை கைது செய்யப்படாதது ஊழியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும்.

இது விடயத்தில் பொலீஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சம்பவத்தைக் கண்டித்துமே இன்று வேலைநிறுத் தம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் மேற்கொள்ள வேண்டிய மேலதிக நடவடிக்கை பற்றித் தாம் ஆராய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**வசாவிளான்...**

மாணவர்களால் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியிலிருந்து பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட மாணவி விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கோரியும் அவர் கைது செய்யப்பட்டமைக்குக் காரணம் குறித்து இதுவரையில் எதுவித தகவலும் தெரிவிக்கப்படாமையைக்கண்டித்துமே அடையாள பகிஷ்கரிப்பு போராட்டம் நடாத்தப்பட்டது.

பிரஸ்தாப மாணவியுடன் அவரது சகோதரன் மற்றும் தாயாரும் கைதுசெய்யப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே.

இது விடயம் சம்பந்தமாக அச்செழு இராணுவ தலைமையகம், ஊரெழு இராணுவப் பொறுப்பதிகாரி, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஈழ மககள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-க)

### இல. தமிழர் ஆசிரியர் சங்க

## தூதுக்குழுவினர் இம்மாதம் 30ஆம்திகதி டிவகலாலாவை சந்திக்க உள்ளனர்

(வவுனியா)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் த.மகாசிவம்.தலைமையிலான தூதுக்குழு எதிர் வரும் 30-ம் திகதி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலர் சுந்தரம்டிவகலாலாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்த உள்ளது.

இச் சந்திப்பின் போது வடக்கு-கிழக்கு மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினை, ஆசிரியர் பிரச்சினை, நிர்வாகப்பிரச்சினை போன்ற விடயங்கள்ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாட நூல் விநியோக விவகாரம், அப் பாட நூல்களில் காணப்படும் அச்சுப்பிழைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளையில், கடந்த வருடம் வடக்கு- கிழக்கில் ஆசிரியர்களால் ஒரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தின் போது முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்தும் செயலரின் கவனத்திற்கு கொண்டுவரப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-க)

### கடந்த வருடம் மட்டும்

## மட்டு. போதனா வைத்தியசாலையில் 2இலட்சத்து 53ஆயிரம் பேருக்குசிகிச்சை

கடந்த வருடம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரண்டு லட்சத்து ஐம்பத்து மூவாயிரத்துத் தொழாயிரத்து முப்பத்தி நாலு பேர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலையின் 1999ம் ஆண்டுப் புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

ஒரு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து அறுபத்துநாலு நோயாளர்கள் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும்,

இரண்டு லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று முப்பத்தி மூன்று பேர் போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றதாகவும்,

நாற்பத்திரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்துநான்கு பேர் விடுதிச்சாலைகளில் அனுமதி பெற்று சிகிச்சை பெற்றதாகவும், தினமும்700 பேர் சிகிச்சை பெற்றுவந்ததாகவும் 50 பேர் தங்கியிருந்து சிகிச்சைபெற்றனர். (வ-60)

## அர்த்தமற்ற யுத்தத்தின் மூலம் மக்களின் அடிப்படைவாழ்வு பாதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அர்த்தமற்ற யுத்தத்தின் மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதையோ தொழில்களிற்குத் தடை விதிக்கப்படுவதையோ அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக பலியாவதையோ தொடரவிடாமல் தடுப்பதற்கு இரு தரப்பினருமே செயற்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

அவர் அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைக் காலமாக யாழ் குடாநாட்டின் தென்மராட்சி பாசையூர், குருநகர், அரியாலை போன்ற பகுதிகளின் கரையோர பிரதேசங்களில் குடிமனைகள் மீது ஏவப்பட்ட ஷெல்களினால் பலர் பலியாகியும், அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்,

முன்னரும் வன்னிப்பகுதியில் புதுக்குடியிருப்பு, மடு தேவாலயம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்பட்டது யாவரும் அறிந்ததே,

இத்தனை வருட காலமாக நடைபெறும் யுத்தத்தின் மூலம் பொதுமக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள் என்பதனை மறுப்பதற்கில்லை,

இன்று தமது சொந்த இடங்களில் வாழமுடியாது தொழில்களை மேற்கொள்ள முடியாமல் பல கஷ்டங்களை அனுபவிக்கும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கை சீராக நடைபெற இச்சம்பவங்களை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பி பெரும்புரட்சியொன்றை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்படும் போது தான் யுத்தத்தின் கொடுமை யாவருக்கும் புரியும்,

ஆகவே இச்சம்பவங்களை வன்மையாக கண்டிப்பதுடன் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன் தாக்குதலில் பலியான கந்தையா குணசேகரம் குடும்பத்தார்க்கும் துயருற்றிருக்கும் அனைவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**யாழ். பிராந்திய..**

வதென ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

கடந்த வருடம் மட்டும் விசர்நாய்க்கடியினால் ஏழு பேர் இறந்துள்ளனர் எனவும் இவ்விழப்பு தவிர்க்கப்படக் கூடியதெனவும் தெரிவித்த தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் இப் பணியிலே தாக்கப்பட்ட சுகாதாரப் பரிசோதகர் ஈடுபட்டாரெனவும் இந்நிலையில் அவர் தாக்கப்பட்ட சம்பவமானது மனித உயிர்களின் இழப்பை மதியாதவர்களின் செயல் எனவும் குறிப்பிட்டார்,

இத்தொழிற்சங்க நடவடிக்கை திட்டமிட்டபடி நடாத்தப்படுமாயின். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட் பட்ட அனைத்து மருத்துவ நிலையங்களும், வெளிக்கள சுகாதார சேவைகளும் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை இன்று அனைத்து பொது சுகாதாரப் பரிசோதகர்களும் தமது பணியை மேற்கொள்ளாது. சுகாதார சேவைகள் பணிமனையில் கூடிதமது எதிர்ப்பைத் தெரிவிப்பர்கள் எனவும் அறியவருகிறது.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி (செல்வி) உமா சிவபாதசுந்தரம் இத்தாக்குதல் சம்பவம் குறித்து யாழ்ப்பாண பொலீஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு நிலையை விளக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [ந]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.